# புனித அன்னம்மாளை நோக்கி நவநாள் செபம்

**NOVENA**

**JULY**

**17 - 25**



**FEAST**

**JULY**

**26**

செங்காங், சிங்கப்பூர்
புனித அன்னம்மாள் ஆலய தமிழ் குழுவிற்கு

எமது மனமார்ந்த நன்றிகள்

# புனித அன்னாளின் வாழ்க்கை வரலாறு

## பிறப்பும் வளர்ப்பும்

யுதேயா நாட்டிலே எஸ்தோலன், எமரென்சியா என்ற தம்பதியினருக்கு கிறிஸ்து இயேசு தோன்றுவதற்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் புனித அன்னம்மாள் பிறந்தார்.அன்னாள் என்ற பெயருக்கு **"அனைத்து அருளும் அழகும் நிரம்பியவள்"** என்பது பொருள். அன்னாள் இயல்பிலேயே அனைவரிடத்திலும் அன்பும், பரிவும், நட்பும் கொண்டு விளங்கினாள். சிறு வயதிலேயே இறைவன் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார். அவ்விறையன்பு விரிவடைந்து, பிறரன்பாக மலர்ந்தது. தன் வாழ்வை முற்றிலும் இறைவனுக்கு அர்ப்பணித்து, இறை உணர்விலும் கடமையிலும் கருத்தூன்றி பிறருக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

## இனிய இல்லறம்

அன்னாள் எடுப்பான தோற்றமும், கம்பீரமான நடையும் உடையவர். அவருக்கு ஏறத்தாழ 15 வயது நடக்கும் போது அவரது பெற்றோர் யூத குலவழக்கப்படி தாவீது குலத்தில் தோன்றிய சுவக்கீன் என்பவருக்கு அன்னாளை மணமுடித்து வைத்தனர். மணமக்கள் இருவரும் அன்பாலும், பக்தியாலும் ஒருவரை ஒருவர் மகிழ்வித்து இல்லறத்தை நல்லறமாக நடத்திவந்தனர்.

இருவரும் இயல்பிலேயே தாராள மனமுடையவர்களாக இருந்ததால், தங்கள் செல்வத்தை மூன்றாகப் பிரித்து ஒரு பகுதியை யெருசலேம் தேவாலயத்திலும், ஒரு பகுதியை ஏழைகளுக்கும் பகிர்ந்தளித்துவிட்டு, ஒரு பகுதியை மட்டும் தங்கள் வாழ்ககைக்கு என வைத்துக்கொண்டனர். அத்துடன் ஆபிரகாமின் குலத்திலிருந்தே மனுக்குல மிட்பர் தோன்றுவார் என்று நம்பிய யூத மக்கள் மகப்பேற்றினை தங்களது விசுவாச வாழ்விற்கு இறைவன் அருளிய அருங்கொடை என்று எண்ணினர். மகப்பேறற்றவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று நம்பினர். அன்பர் இயேசுவைப் பெறக் கூடிய பரம்பரை உரிமையை இழந்துவிட்டதாகக் கருதி அன்னாள் தம்பதியினர் மனம் வருந்தினர். இந்நிலையே, அவ்வன்புத் தம்பதியரை பெரும் துன்பத்தில் ஆழ்த்தியது.

**ஏக்கமும், நீக்கமும்**

ஒருமுறை அவர்கள்யெருசலம் தேவாலயத்திற்கு சென்று பலி செலுத்த முனைந்த பொழுது, பெரிய குருவாகப் பணியாற்றிய ரூபன் என்பவர் குழந்தையில்லாத் தம்பதிகள் “யெகோவாவின் முன் நிற்கவும் தகுதியற்றவர்கள்” என்று கூறி சுவக்கீனை விரட்டி விட்டார். எல்லையற்ற துன்பத்தில் வருந்திய இருவரும் இறைவனது வல்லமையில் ஆழ்ந்த விசவாசம் கொண்டு தன் இழிநிலையைப் போக்கியருளுமாறு வேண்டினர். தனக்கு தாயாகும் வரம் தந்தால், இறைவனுக்கே

அர்ப்பணித்து விடுவதாக அன்னாள் மனம் உருகி வேண்டினாள். தாழ்ச்சியும் மனதுருக்கமும் கொண்ட அந்தக் கண்ணீரின் வேண்டுதல் உடனே கேட்கப்பட்டது. "**விடியற்காலத்து நட்சத்திரம் என்றும், விசுவாசிகளின்தாய் என்றும், வரங்களின் வாய்கால் என்றும், மீட்பரின் அன்னை என்றும் புகழப்படுகின்ற பாவமாசற்ற அமல உற்பவியாம் அன்னைமரியாள்**" அன்னாளிடம் பிறப்பதற்கு இறைவன் திருவருள் கூர்ந்தார்.

## விண்ணக அரசின் மண்ணக வழிக்காட்டி

அன்னாளுக்கு ஏற்பட்ட மலடி என்ற சாபத்தினை நீக்க மண்ணில் உதித்த மரியாள் என்ற உடன்படிக்கையின் பேழையை தாங்கிய திருத்தூயகமான புனித அன்னாள் தன் மகளை ஞானத்திலும் பக்தியிலும் வளர்த்தார். அக்கால மகளிருக்குத் தேவையான நூல்நாற்றல், ஆடைநெய்தல், சாயமேற்றல், பூந்தையல் வேலைசெய்தல் போன்ற கலைகளிலும் வீட்டு வேலைகளிலும் பழக்கினார்கள். தம்மகளுக்கு மூன்று வயது நிரம்பியதும் யெருசலேம் தேவாலயத்தில் தாங்கள் நேர்ந்தபடி மரியாளை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தனர்.

மரியாளைப் பிரிந்த தம்பதிகள் இருவரும் மனம் கலங்கினாலும், இறைவனின் திருச்சித்தத்திற்கு பணிந்து வாழ்ந்தனர். மரியாள் தேவாலயம் சென்ற சிறிது காலத்தில் சுவக்கீன் மரணமடைந்தார். புனித அன்னாள்,

மரியாளின் திருமணத்திற்கு முன்பே மறைந்ததாக சில ஏடுகளிலும், இயேசுவிற்கு எட்டு வயது நடக்கும்போது இறந்ததாக சில ஏடுகளிலும் கூறப்படுகின்றது. அவர்கள் மறைந்த காலம் பற்றிய கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவர்களது புனித வாழ்க்கையானது, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு போற்றப்படுகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**புனிதமும் ,புகழும்**

யெருசலேமில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான தொல்லைகள் அதிகரித்த போது, புனித அன்னாளின் உறவினர்கள் இறந்த அவர்களது திருவுடலை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்ல விரும்பி கல்லறையிலிருந்து எடுத்து தம்முடன் வைத்திருந்தனர். அப்பொழுது பகைவர்கள் அவர்கள் அனைவரையும் பிடித்து பாய்மரமில்லாத படகில் ஏற்றி கடல் வழியேவிட்டனர். பல நாட்கள் பயணம் செய்தபின் இறைவன் திருவருளால் மார்செயல்ஸ் நகரில் படகு கரை சேர்ந்தது. திருவுடலை எடுத்துச் சென்ற பக்தர்கள் மலைமீது இருந்து ஆப்ட் நகரில் ஒரு சுரங்கக் கல்லறையில் அன்னாளின் உடலை வைத்தனர். சுமார் 7 நூற்றாண்டு அளவாக மறைந்திருந்த புனித அன்னாளின் திருவுடல், ஒரு, புதுமை மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. பல்வேறு நாடுகளில் வேண்டுகோளுக்கேற்ப அன்னாள் உடலின் பல பகுதிகளின் எலும்புகள் வெவ்வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டு, பக்தர்களால் மரியாதை

செய்யப்பட்டு வருகிறது. யேருசலேம், கான்ஸ்டான்டிநோபிள், உரோமை, இங்கிலாந்து, பிரான்ஸ், அயர்லாந்து, அமேரிக்கா, கனடா போன்ற நாடுகளில் கட்டடப்பட்டடுள்ள தேவாலயங்களில் அன்னாள் வீற்றிருந்து தம்மை நாடிவரும் பக்தர்களுக்காக இறைவனிடம் பரிந்துரை செய்து புதுமைகள் பலவற்றை நடத்தி வருகின்றார். 1484 ஆம் ஆண்டு முதல் ஜூலை 26 ஆம் நாள் புனித அன்னாளின் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நம் ஆண்டவர் இயேசு கூறுவது பொல, அன்னாள் ஈன்றெடுத்த கன்னிமரியின் தன்மையிலிருந்து அவருடைய தாயை நாம் அறியலாம். பாவமே அறியாத தூயவாழ்வு வாழ்ந்த அன்னாள் சுவக்கீன் தங்கள் மகளை மாசணுகாமரியை கிறிஸ்துவை ஈன்றெடுக்கும் முன்னும் ஈன்றெடுத்த பின்னும் அதாவது முப்பொழுதும் கன்னியாக இருந்தவளை உலகின் இரட்சகரை அனைவரும் அதிசயிக்கும் இயேசுவை ஈன்றவளைப் பெற்றதனால் பெறும் பேற்றை அடைந்துள்ளாள். அப்பேர்ப்பட்ட அன்னையின் திருநாள் செங்காங், சிங்கப்பூரில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை திங்கள் 26ம் தேதிக்குப் பின்வரும் வெள்ளி, சனி, ஞாயிற்றுகிழமைகளில் சிறப்பாக நடைபெறுகிறது.

வருக! அன்னையின் ஆசிர் பெறுக!!

# புனித அன்னாளின் நவநாள் செபம்

<u>நவநாள் பாடல்-1</u>

இதயம் மகிழுதம்மா
துயர் கறைகள் மறையுதம்மா
உள்ளமும் துள்ளுதம்மா - உந்தன்
தாய்மையின் நினைவாலே அம்மா

தாயெனும் போதினிலே
மனம் தானுன்னைத் தேடுதம்மா - 2
ஈன்ற தாயும் போற்றும் உந்தன்
பாதம் பணிந்திடுவேன் அம்மா

வாழ்வெனும் பாதையிலே
ஒளி விளக்காய் நீ இருப்பாய் - 2
உண்மை மனதும் உயர்ந்த நெறியும்
நிறைந்து வாழ்ந்திடுவேன் அம்மா

## செபம் (முழந்தாளிடவும்)

**முதல்வர்:** பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே

**எல்லாரும்:** ஆமேன்.

**முதல்வர்**: அருள் பாலிக்கும் புனித அன்னாளே / அன்னையருக்குப் பாதுகாவலியே / உம்மை நம்பி உமது அடைக்கலம் தேடி வந்துள்ளோம்.

**எல்லாரும்**: புனித அன்னாளே / தேவ அன்னையின் திருத்தாயாரே / மனுக்குல மீட்பராம் / யேசுவைப் பெற்றெடுத்த / மரியன்னைக்கு நீர் காட்டிய அன்பையும் / பராமரிப்பையும் நினைத்து / உம்மைப் புகழ்ந்து உமக்கு நன்றி கூறுகின்றோம்.

**முதல்வர்**: மிகுந்த வணக்கத்தோடும் / பக்தியோடும் உம்மை எம் அன்னையாகவும் / அடைக்கலமாகவும் தெரிந்து கொள்கின்றோம்.

**எல்லாரும்**: உம் திருப்பேரன் இயேசுகிறிஸ்து தமது பாடுகளாலும் / இரத்தாத்தாலும் / உமது திருமகள் அன்னைமரி / தமது வியாகுலங்களாலும் / சம்பாதித்த மக்களாகிய எங்களை தயவாய்ப் பார்த்து / அன்று தேவாலயத்திலே / மாமரியைக் கொண்டு சேர்த்ததுப்போல / எங்களையும் இறைவன் பதம் / கொண்டு சேர்க்கும்வரை பாதுகாத்து / வழிநடத்த வேண்டுமென்று கெஞ்சி மன்றாடுகின்றோம்.

**முதல்வர்**: எஸ்தலோன், எமரென்சியா என்ற அன்புத் தம்பதியரின் புதல்வயான புனித அன்னாளே,

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

**முதல்வர்**: ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே / அன்னை மரியின் தாயும் / குடும்பங்களின் பாதுகாவலியும் / பிள்ளைப் பேறற்றவர்களின் நம்பிக்கையுமான / புனித அன்னாளை / எங்கள் திருத்தலத்தில் பாதுகாவலியாக / அளிக்கத் திருவுளமானீரே / அவர் வழியாக உமது ஆதரவைத் தேடி வந்துள்ள / எங்கள் மீது / இரங்கி எங்கள் விண்ணப்பங்களுக்கு செவிசாய்த்தருளும். எங்கள் மனமுவந்த நன்றியை ஏற்றுக்கொண்டு / நாங்கள் நம்பிக்கையோடு கேட்கும் வரங்களை எங்களுக்கு அளித்தருளும்.

**எல்லாரும்**: எங்கள் குழந்தைகள் அனைவரையும் / உமது திருப்பாதத்தில் வைக்கிறோம். மாமரியைப் பெற்று பாலூட்டி, சீராட்டி வளர்த்த புனித அன்னாளே / எங்கள் பிள்ளைகளும் / அன்னை மரி போல ஆண்டவருக்கு உகந்த ஞானமுள்ள பிள்ளைகளாக வாழ உம் வழியாக மன்றாடுகிறோம்.

**முதல்வர்**: நோயுற்றோரின் அடைக்கலமான புனித அன்னம்மாளே!

**எல்லாரும்**: பல்வேறு உடல், உள்ள நோய்களால் வருந்தும் அனைவர் மீதும் / உமது அருள்வரங்களை பொழிந்தருளும் / இறைவனுக்கு / சித்தமானால், நோய் நீங்கி, நலம் பெற உதவும், இல்லையேல் அவற்றைப்

பொறுமையுடன் தாங்கிக் கொள்ளும் மன உறுதியைத் தந்தருளும். ஆன்மீக நலமற்றோர் / நலம் பெற உம் வழியாக / மன்றாடுகின்றோம்.

**முதல்வர்**: மரியாள் என்னும் முத்தை உலகிற்கு அளித்த சிப்பியே / புகழ்மிகு புனித அன்னம்மாளே!

**எல்லாரும்**: இந்த ஆலயத்தில் குழுமியிருக்கும் / தாய்மார்கள் அனைவரையும் / உமது பாதுகாவலில் வைக்கிறோம்.குறிப்பாக பிள்ளையற்று இருக்கும் / பெண்கள் மீது உமது / கருணைக் கண்களைக் திருப்பியருளுமாறு உம்மை மன்றாடுகின்றோம். இருபது ஆண்டு காலமாக / குழந்தையற்று இருந்தபோது நீர் அடைந்த வருத்தங்களையும் / வேதனைகளையும் / அவமானங்களையும் / பார்த்து மகப்பேறற்ற மகளிர்மீது / இரக்கமாயிருந்து மகப்பேறு வழங்கி / மகிழ்ச்சிப்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**முதல்வர்**: எங்களது பாதுகாவலியான புனித அன்னம்மாளே!

**எல்லாரும்**: ஓயாத உழைப்பின் மூலம் / உம் குடும்பத்தைப் பராமரித்தீரே / நாங்களும் எங்கள் குடும்பக் கடமைகளை / தாழ்ச்சியோடும் / அன்போடும் நிறைவேற்றவும் / உழைப்பின் மேன்மையை உணர்ந்து / எங்கள் குடும்பத்தை / இறை சித்தத்திற்கு ஏற்ப / வாழும்

குடும்பமாக மாற்றவும் / உமது அருள் வரம் வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**முதல்வர்**: ஆறுதல் வழங்கும் அன்னை அன்னாளிடம் / நம் தனிப்பட்ட விண்ணப்பங்களை அமைதியாக எடுத்துச் சொல்வோம்.

(சிறிது நேரம் அமைதியாக செபித்தல்)

**முதல்வர்**: நோயளிகளுக்காக செபிப்போம்

**எல்லாரும்**: இரக்கம் நிறைந்த இறைவா, உடல் உள்ள நோயினால் வாடி வதங்கும் / உம் மக்களை தயவாய் கண்ணோக்கும். இப்பிணி காலம் எங்கள் ஆன்ம வாழ்வில் / மறுமலர்ச்சிக்குரிய மாற்றங்களை / எங்களிடத்தில் கொண்டுவர எங்களுக்கு அருள் தாரும். இத்துன்பங்களை நாங்கள் / இறைச் சித்தமென ஏற்று, / உம் பேரிரக்கத்தால் விரைவில் குணம் பெற அருள் தாரும்.

**முதல்வர்**: புனித அன்னாளிடம் குழந்தை வரம் வேண்டி மன்றாடுவோர்வளுக்காக செபிப்போம்.

**எல்லாரும்**: நீண்டநாள் மகப்பேறற்று வருந்தி / இறைவனின் திருவருளாள் புனித மாமரியை / மகளாகப் பெற்ற புனித அன்னாளே / இவ்வுலக வாழ்வில் / வாரிசுகள் அற்று / வருந்தி பழிச் சொற்களையும் / அவமானத்தையும் ஏற்று நிற்கும் / மக்கள் மீது தயவாய் இரங்கும்.

நீர் வாழ்ந்த போது / நீர் அடைந்த மனத்துயரத்தையும் / துன்பங்களையும் / நினைவு கூர்ந்து / உம் திருப்பேரனும் எங்கள் ஆண்டவருமாகிய / இயேசு கிறிஸ்துவிடம் / எங்களுக்காகப் பரிந்துப்பேசிக் குழந்தை வரம் கேட்டு நிற்பவருக்கு குழந்தைப் பாக்கியம் பெற்றுத் தாரும்.

**முதல்வர்**: பெற்றோருக்காகச் செபிப்போம்.

**எல்லாரும்**: இங்கிருக்கின்ற பெற்றோர்கள் அனைவரும் / நம்பிக்கையுடன் வாழ்ந்து / தங்களுக் வேண்டியதைப் / பெற்றுக் கொள்ளவும் / தாங்கள் பெற்ற பிள்ளைகளைப் / இறைவழியில் நடப்பிக்கவும் / வேண்டிய அருளை / உம் திருமகளிடம் வேண்டி பெற்றுத் தாரும்.

**முதல்வர்**: குழந்தைக்களுக்காக செபிப்போம்.

**எல்லாரும்**: மீட்பரின் தாய்க்கு அன்னையான புனித அன்னாளே / இங்கிருக்கின்ற குழந்தைகள் யாவரும் விசுவாசத்திலும், நற்படிப்பினைகளிலும் வளர்ந்து / பெற்றோருக்கும் / நாட்டுக்கும் / திருச்சபைக்கும் / பெருமைச் சேர்க்கக் கூடியவர்களாக வளர அவர்களுக்கு உதவியருளும்.

**முதல்வர்**: இந்த நவநாளில் கலந்து கொண்டிருப்போருக்காக செபிப்போம்.

**எல்லாரும்**: புனித அன்னாளே / இந்நவநாளில் நம்பிக்கையோடு / கலந்து கொண்டு / தம்

மன்றாட்டுக்களைச் சமர்ப்பிக்கும் / ஒவ்வொருவரும் மன நிறைவோடும் / மகிழ்வோடும் / தாங்கள் வேண்டி / விரும்பியதைப் பெற்றுக் கொண்டு / வாழ உம் வல்லமைமிக்கப் பரிந்துரையால் / எமக்கு உதவியருளும். ஆமென்.

**நன்றியறிதல்**

**முதல்வர்:** இறைவனை மையமாகக் கொண்டு / வாழ்வு நடத்திய / புனித அன்னாள் வழியாக / நாங்கள் பெற்றுக் கொண்ட / அனைத்து நன்மைகளுக்காகவும்.

**எல்லாரும்:** ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**முதல்வர்:** புனித அன்னாள் வழியாக / தாய்மார்கள், அனைவரும் வழங்கிய அருள் வரங்களுக்காகவும்.

**எல்லாரும்:** ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**முதல்வர்:** யேசுவின் பாட்டியான புனித அன்னாள் வழியாக / இறைமகனின் உடலாம் திருச்சபைக்கு / இறைவன் செய்துவரும் / அனைத்து செயல்களுக்காகவும்.

**எல்லாரும்:** ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**முதல்வர்**: உடல் வருந்தி உழைப்போர் அனைவருக்கும் / புனித அன்னாள் பெயரால் / நீர் உழைப்பின் பயன்களுக்காக

**எல்லாரும்**: ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**முதல்வர்**: இரக்கம் நிறைந்த புனித அன்னாள் வழியாக / ஏழை எளியவர்களுக்கு / நீர் செய்த பொருளாதார ஆன்மீக நலன்களுக்காக

**எல்லாரும்**: ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

**முதல்வர்**: முதிய வயதில் ஒப்பற்ற / ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் பேறுபெற்ற புனித அன்னாள் வழியாக / மகப்பேறற்றோர் அடைந்த நன்மைகளுக்காக

**எல்லாரும்**: ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்

(மௌனமாக நன்றி செலுத்துதல்)

## புனித அன்னாள் மன்றாட்டு மாலை

**முதல்வர்**: சுவாமி கிருபையாயிரும்

**எல்லாரும்**: சுவாமி கிருபையாயிரும்

**முதல்வர்**: கிறிஸ்துவே கிருபையாயிரும்

**எல்லாரும்**: கிறிஸ்துவே கிருபையாயிரும்

**முதல்வர்**: சுவாமி தயவாயிரும்

**எல்லாரும்**: சுவாமி தயவாயிரும்

**முதல்வர்**: கிறிஸ்துவே

**எல்லாரும்**: எங்கள் பிராத்தனையைக் கேட்டருளும்

**முதல்வர்**: பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா

**எல்லாரும்**: எங்கள் தயை பண்ணி இரட்சியும்சுவாமி

**முதல்வர்**: உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சர்வேசுரா

**எல்லாரும்**: எங்களை தயை பண்ணி இரட்சித்தருளும் சுவாமி

**முதல்வர்**: தூய ஆவியான சர்வேசுரா

**எல்லாரும்**: எங்களை தயை பண்ணி இரட்சித்தருளும் சுவாமி

**முதல்வர்**: புனித தமதிருத்துவமாகிய ஏக சர்வேசுரா

**எல்லாரும்**: எங்களை தயை பண்ணி இரட்சித்தருளும் சுவாமி

**முதல்வர்**: புனித மரியாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: தாவீது அரசரின் வழி வந்த மகளான புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: கன்னிமரி உடன்படிக்கையின் பேழையை தாங்கிய திருதூயகமாகிய புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: பாவமாசற்ற மரியாளை பெற்றெடுத்த புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: ஆன்மீக வாழ்வில் பிறருக்கு முன்மாதிரியாக வாழ்ந்த புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: குடுபங்களின் பாதுகாவலியான புனித அன்னாளே

**எல்லாரும்** : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: இருபது ஆண்டு காலமாக மகப்பேரற்று வருந்திய அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: குழந்தையற்றவர்களுக்கு அடைகலமான புனித அன்னம்மாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: பொறுமையின் மாதிரியான புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: தாய்மார்களுக்கு சிறந்த மாதிரியான புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: ஞானத்தின் ஊற்றாகிய புனித மரியாளை ஞானத்தில் வளர்த்த புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: லூயிஸ் அரசரின் வாதநோயைக் குணமாக்கிய புனித அன்னாளே

**எல்லாரும்** : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: நோயுற்றோர் குணம் பெற உதவி புரியம் புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: புதுமையாக நீரூற்றுக்கள் தோன்ற காரணமான புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: உடல்உள்ள ஊனமுற்றோருக்கு ஆறுதல் அளிக்கும் புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: உமது திருப்பண்டங்களின் மூலம் உலகு முழவதும்புதுமை செய்து கொண்டிருக்கும் புனித அன்னாளே

**எல்லாரும்** : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: உலக செல்வங்களைவிட பரலோக செல்வங்களை நாடி தேடிய புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: ஆலய பராமரிப்பிற்காக தனது சொத்தில் மூன்றில் ஒரு பாகம் அளித்த புனித அன்னாளே

**எல்லாரும்** : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: வறியவருக்கு பகிர்ந்தளித்த புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: தன் அன்புமகளை மூன்று வயதுலேயே ஆலயத்திற்கு காணிக்கையாக்கிய புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: மீட்பரின் அன்னைக்குத் தாயாகும் பேறுப்பெற்ற புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: விடியற்காலத்து நட்சத்திரமாகிய மாமரியை ஈன்ற புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: தனது முதிர் வயதில் ஒப்பற்ற மாமரியை குழந்தையாகப்பெற பேறுபெற்ற புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**முதல்வர்**: ஆதிப் பெற்றோரின் பாவம் தீண்டாத அன்னைமரியைப் பெற்றெடுத்த அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**முதல்வர்**: உலக மீட்பரைப் பேரனாக அடையப் பேறு பெற்ற புனித அன்னாளே

**எல்லாரும்**: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

## புனித அன்னாள் செபம்

மகா பரிசுத்தமும் இரக்கமும் அனுக்கிரகமும் நிறைந்த புனித அன்னம்மாளே! / தேவ மாதாவின் தாயே! / நீர் எல்லையில்லா விதத்தில் / இறைவன்மேல் அன்பு கொண்டிருக்கின்றீர். நீர் கேட்கும் மன்றாட்டை/ அவர் தள்ளிப் போடுகிறதில்லையென்று அறிந்திருக்கின்ற நாங்கள்/ உமது திருப்பாதத்தை அண்டி வருகிறோம். உம்மால் உலகில் நடந்த புதுமைகளுக்குக் கணக்கில்லையே! வரப்பிரசாதத்தைத் தாராளமாய்க் கொண்ட புனித அன்னையே!/ நாங்கள் மெய்யான விசுவாசிகளாய் நடந்து / நீரோடை அருகே நடப்பட்ட மரம் போல/ குடும்பத்தில் வளர்ந்து, நற்கனி தருவோமாக. எங்கள் துன்பங்களில் ஆறுதலடைந்து / பொறுமையைக் கடைப்பிடித்து / எங்களுக்கு ஆண்டவர் தந்த

பிள்ளைகளை / நன்னெறியில் நடப்பிக்கும் வரத்தை நாங்கள் அடையச் செய்தருளும். நாங்கள் குடும்பச் செபத்தில் ஒருமனப்பட்டு / அனைவரோடும் அன்பாய் வாழ துணைசெய்தருளும். மதிப்பும், குடும்ப வாழ்வில் தியாகமும், அன்பும் கொண்டிருப்போமாக. எங்கள் பிள்ளைகள் தேவ விசுவாசத்தில் வளரவும் / நாங்கள் அறிவிலும் / தேவ ஆசீர்வாதத்திலும் உயரவும் / செய்தருளும். தீயவனாலும், தீமைகளாலும் வெல்லப் படாதிருக்கப் / பண்ணியருளும். எங்கள் வீட்டையும் குடும்பத்தையும் / குடும்பத்திலுள்ள உறுப்பினர்களையும் / எல்லாவித ஆபத்துகளிலிருந்தும் / காத்தருளும். தேவபக்தியும், உண்மையும், கீழ்படிதலுமுள்ள ஊழியர்களை நாங்கள் அடையவும் / எங்கள் பிள்ளைகளுக்குச் சரியான வாழ்க்கை அமைய எங்களுக்காக மன்றாடும். எங்கள் துன்பங்கள் நீங்கி / நாங்கள் எப்போதும் மகிழ்ந்திருப்போமாக. மகா உன்னதமான வரப்பிரசாதங்களை அடைந்த பரிசுத்த அன்னம்மாளே! நாங்கள் தேவ வரத்துக்கு / ஏங்கிநிற்கச் செய்தருளும். நாங்கள் தேவகாரியங்களை விரும்பி/ உயரிய பக்தியை கொண்டுவாழ மன்றாடும். எல்லா நன்மைகளும் கொண்ட இறைவனை / நாங்கள் அணுகி அவரின் அருள் பெற்று உயரச்செய்தருளும்.

ஆமென்.

நவநாள் பாடல்-2

அன்னாள் அன்னயே - எங்கள்
அன்னாள் அன்னயே
அமலியை ஈன்றெடுத்த
அன்னாள் அன்னயே

ஆதிப்பிதாவின் திரு ஏகசுதன் அன்னையை
அன்புடன் எமக்களித்த அற்புத தயாளியே - அன்னாள்

நாயகி சகாயகி நமபினோர் நற்போதகி
தூயமலரடி வந்தோம் நேய நற்குணாகரி - அன்னாள்

மங்களம் கொண்டாடும் மாசில்லாத மாமேணி
தெண்டனிட்டுமைப் பணிந்து வாழ்த்தியே
கொண்டாடுவோம் - அன்னாள்

**முதல்வர்:** அன்பின் இறைவா, புனித அன்னாளை பாவ மாசற்ற தேவதாய்க்கு / அன்னையாகத் தேர்தெடுத்து / எண்ணற்ற அருள் வரஙகளால் / அவர்களை அணி செய்த / உம்மைப் போற்றி உமக்கு நன்றி கூறுகிறோம். அவர்கள் வழியாக / செபிக்கின்ற ஒவ்வொருவரும் உம்மையும், உம் திருத்தாயரையும் / இறுதிவரை அன்பு செய்து / உமது பாதுகாப்பில் / வாழ வரம் அருளும். திருச்சபையையும் / அதன் படிப்பினைகளையும் / ஆழ்ந்த விசுவாசத்தோடு / ஏற்றுக் கொள்ளவும் / எங்கள்

வாழ்வில் ஏற்படும் / இக்கட்டு இடைஞ்சல்களை / இறைவன் துணையோடு / வெற்றி கொள்ளவும் வரம் அருளும். இச்சிறப்பு நவநாளில் பங்கேற்கும் / அனைவர் மீதும் உம் அருள் வரம் பொழிந்தருளும். ஆமென்.

SACN

For Novena Video

www.iraivarthai.org